இந்திய வேளாண் சந்தையை அமெரிக்காவிடம் ஒப்படைத்ததை கண்டித்தும், ஈரான் மீது அமெரிக்கா – இஸ்ரேல் நடத்தும் போரை நிறுத்தக் கோரியும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் தாம்பரம் பேருந்து நிலையத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர். படம்: எம்.முத்துகணேஷ்

பங்காரு அடிகளார் 86-வது பிறந்தநாள் விழாவில்

ரூ.4 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்

ஆன்மிக இயக்கத் தலைவர் லட்சுமி பங்காரு அடிகளார் வழங்கினார்

சென்னை

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தின் ஆன்மிக குரு பங்காரு சித்தரின் 86-வது பிறந்தநாள் விழா நேற்று கோலாகலமாக நடைபெற்றது.

சித்தர் பீடம் சென்ற ஆன்மிக இயக்கத் தலைவர் லட்சுமி பங்காரு அடிகளார், ஆதிபராசக்தி அம்மனுக்கும் பங்காரு அடிகளார் திருவுருவச் சிலைக்கும் சிறப்பு பூஜைகளை செய்தார். தொடர்ந்து ரூ.4 கோடி மதிப்பிலான நலத்திட்டங்கள் வழங்கும் விழா நடைபெற்றது. ஆன்மிக இயக்க துணைத் தலைவர்கள் கோ.ப.அன்பழகன், கோ.ப.செந்தில் குமார், ஸ்ரீதேவி பங்காரு ஆகியோர் முன்னிலை வகித்தனர். கலவை பொறியியல் கல்லூரி தாளாளர் உமாதேவி ஜெய் கணேஷ் அனைவரையும் வரவேற்றார்.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான தென்னிந்திய தூதரக துணை ஆணையர் கணேசநாதன் கீதீஸ்வரன், இஸ்ரோ துணைத் தலைவர் விஞ்ஞானி கண்ணு, முன்னாள் எம்.பி. துரை, முன்னாள் எம்எல்ஏ மணி கலந்துகொண்டு விழா மலரை வெளியிட்டனர். 800 பயனாளிகளுக்கு 4,869 பொருட்கள் வழங்கப்பட்டன.

ஸ்ரீசக்ரம் வரைதல், குரு போற்றி கோடியர்ச்சனை செய்தல் ஆகியவை உலக சாதனை முனையத்தால் அங்கீகரிக்கப்பட்டு அதிகாரப்பூர்வ நடுவர் ஆலிஸ் ரெனாடு ப்ரான்ஸ், லட்சுமி பங்காரு அடிகளாரிடம் விருதுக்கான சான்றிதழை வழங்கினார்.

ஆன்மிக குரு பங்காரு சித்தர் 86–வது பிறந்தநாள் விழாவில் ஆன்மிக இயக்க தலைவர் லட்சுமி பங்காரு அடிகளார் பங்கேற்று ரூ.4 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினர். அருகில் துணைத் தலைவர்கள் அன்பழகன், செந்தில்குமார், ஸ்ரீதேவி, உமாதேவி உள்ளிட்டோர்.

திருத்தணி, திருவள்ளூரில் பேருந்து நிலையம்

முதல்வர் ஸ்டாலின் காணொலி மூலம் இன்று திறந்து வைக்கிறார்

திருவள்ளூர்

திருத்தணி மற்றும் திருவள்ளூர் புதிய பேருந்து நிலையங்களை மார்ச் 4-ம் தேதி (இன்று) காணொலி காட்சி மூலம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்.

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரத்தின் மையப் பகுதியில் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த பேருந்து நிலையம் மற்றும் அதனையொட்டியுள்ள முக்கிய சாலைகளில் தொடர்ந்து போக்குவரத்து நெரிசல் ஏற்பட்ட வண்ணம் உள்ளது. இதனை தவிர்க்கும் வகையில், திருத்தணி, அரக்கோணம் சாலையில் அரசு போக்குவரத்து பணிமனை அருகே 4.5 ஏக்கர் பரப்பளவில் நகராட்சி நிர்வாகம் சார்பில் ரூ.20.97 கோடி மதிப்பில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி கடந்த 2022-ம் ஆண்டு முதல் நடைபெற்று வந்தது.

சமீபத்தில் அப்பணி முடிவுக்கு வந்துள்ளது. இதையடுத்து, சென்னையில் உள்ள தமிழக அரசின் தலைமை செயலகத்தில் இருந்தவாறு முதல்வர் ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் பொதுமக்களின் பயன்பாட்டுக்காக மார்ச் 4-ம் தேதி (இன்று) திருத்தணி புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைக்க உள்ளார்.

திருவள்ளூர் நகரின் மையப் பகுதியில் திரு.வி.க. பேருந்து நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், திருவள்ளூர் நகரில் ஏற்பட்டு வரும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையில், திருவள்ளூர், ஊத்துக்கோட்டை சாலையில் 5 ஏக்கர் பரப்பளவில் நகராட்சி நிர்வாகம் சார்பில் ரூ.36 கோடி மதிப்பில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி கடந்த 2023-ம் ஆண்டு முதல் நடைபெற்று வந்தது. பணிகள் முடிவுக்கு வந்துள்ளதையடுத்து, முதல்வர் ஸ்டாலின், காணொலி காட்சி மூலம் மார்ச் 4-ம் தேதி (இன்று) திருவள்ளூர் புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைக்க உள்ளார். மார்ச் 30 முதல், திருவள்ளூரிலிருந்து சென்னை, ஸ்ரீபெரும்புதூர் உள்ளிட்ட இடங்களுக்கு செல்லும் அனைத்து பேருந்துகளும் புதிய பேருந்து நிலையத்திலிருந்து மட்டுமே இயக்கப்பட உள்ளன.

காஞ்சிபுரத்தில் 'மாவட்ட திறன் மையம்' திறப்பு

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலகத்தின் தரைதளத்தில், ரூ.5.28 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 'மாவட்ட திறன் மையம்' (திறனகம்) நேற்று தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த மையத்தை ஆட்சியர் சினேகா தொடங்கி வைத்தார். இந்தத் 'திறனகம்' குறித்து ஆட்சியர் பேசும்போது, "ஒரே கூரையின் கீழ் தொழில் வழிகாட்டல், திறன் மேம்பாட்டு ஆலோசனைகள் மற்றும் வேலைவாய்ப்புத் தகவல்களை வழங்கும் மையமாக இது செயல்படும். குறிப்பாக, இளைஞர்களின் தொழில் விருப்பங்களை இன்றைய தொழில்துறைத் தேவைகளுக்கேற்ப மேம்படுத்தும் 'வெற்றி நிச்சயம்' திட்டத்தின் செயல்பாடுகள் இங்கிருந்து ஒருங்கிணைக்கப்படும்" என்றார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் க.ஆர்த்தி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத் துணை இயக்குநர் கி.செந்தில்குமார், அரசு உயர் அலுவலர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

தமிழ்நாடு அரசு
ஊராட்சி ஒன்றியம் ஆலத்தூர்,
பெரம்பலூர், மாவட்டம்,

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
நாரணமங்கலம் கிராம ஊராட்சி பொது நிதி 2025–2026
மின் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 3221/2025/ஆ4 நாள் : 02.03.2026

1. முழுமையான விவரங்களுக்கு அரசு இணையதள முகவரி www.tntenders.gov.in-ஐ பார்க்கவும்.
2. பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம், தனி அலுவலர் / நாரணமங்கலம் கிராம ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலர் (V.P)ன்; கிராம ஊராட்சி பொது நிதி திட்டம் 2025-2026 ன் கீழ் ஆலத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராம ஊராட்சிகளில் மேற்கொள்ளும் பணிக்கு மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை மூலம்) வரவேற்கப்படுகிறது.
3. மின்வாரியான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 02.03.2026 முதல் 09.03.2026 வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. **முக்கியமான நாட்கள்**
   1. மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : **09.03.2026 பிற்பகல் 3.00 மணி வரை**
   2. மின் ஒப்பந்த புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **09.03.2026 பிற்பகல் 4.00 மணி முதல்**
5. இதர விவரங்கள் ஒப்பந்த நமுனாவில் தெரிந்து கொள்ளலாம்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), (பொ)
ஊராட்சி ஒன்றியம், ஆலத்தூர்
செ.ம.தொ.இ/1555/ஒப்பந்தப்புள்ளி/2026

காஞ்சி வாணி வித்யாலயா பள்ளி சார்பில்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு ஓட்டம்

சென்னை

கல்விச் சேவையில் கடந்த 43 ஆண்டுகளாக ஈடுபட்டு வரும் மீனாட்சி அம்மாள் கல்விக் குழுமத்தின் ஓர் அங்கமான காஞ்சி வாணி வித்யாலயா பள்ளியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வுக்காக, மீனாட்சி அம்மாள் கல்வி அறக்கட்டளை சார்பாக 2-ம் ஆண்டு மாரத்தான் போட்டி நடைபெற்றது.

காஞ்சி வாணி வித்யாலயா பள்ளி முதல்வர் சுமதி வெங்கட் போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில் 400-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

5 முதல் 7 வயது உடைய சிறுவர்களுக்கு ஒரு கி.மீ. ஓட்டமும், 8 வயது முதல் 11 வயதுவரை உள்ள மாணவர்களுக்கு 3 கி.மீ. தூரமும், 12 முதல் 14 வயது வரை உள்ள மாணவர்களுக்கு 5 கி.மீ. ஓட்டமும் நடைபெற்றது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்து பள்ளி மாணவர்களுக்கிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இப்போட்டி நடைபெற்றது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ், கோப்பைகளை பள்ளி முதல்வர் சுமதி வெங்கட் வழங்கினார். பங்கேற்ற அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் டி-ஷர்ட், உணவு வழங்கப்பட்டது.

காஞ்சி வாணி வித்யாலயா பள்ளியில் நடைபெற்ற மாரத்தான் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ், கோப்பையை பள்ளி முதல்வர் சுமதி வெங்கட் வழங்கினார்.

சாலையை சீரமைக்க கோரி சிஐடியு போராட்டம்

பல்லாவரம்

திரிசூலத்தில் 20 கிரசர்களுக்கு வந்து செல்லும் லாரிகளால், ராணி அண்ணா நகரில் இருந்து மூவரசம்பட்டு வரையிலான அம்மன் நகர் பிரதான சாலை பழுதடைந்துள்ளது. இந்த சாலையை சீரமைக்க வேண்டும் என்று கோரி அம்மன் நகர் டாஸ்மாக் கடை அருகே சென்னை, புறநகர் கட்டுமான தொழிலாளர் சங்கத்தின் பல்லாவரம் செயலாளர் குமார் மேஸ்திரி தலைமையில் போராட்டம் நடைபெற்றது.

MSME TECHNOLOGY DEVELOPMENT CENTRE CHENNAI
Government of India Autonomous Body
CFTI, 65/1, G.S.T. Road, Guindy, Chennai - 600 032
2 DAYS (SATURDAY & SUNDAY) CLASS ROOM TRAINING PROGRAMME ON
HOW TO FIND EXPORT OPPORTUNITIES
EXPORT START-UP COURSE
DATES: 14-03-2026 & 15-03-2025 (Satuday & Sunday)
TIMINGS: 10.00 A.M. to 05.00 P.M. **ONLINE BATCH AVAILABLE**
KEY TOPICS COVERED WITH PRACTICAL SESSIONS
- **HANDS ON PRACTICE** Finding Export Potential Products / Markets
- **MARKET SELECTION** Political & Economic Environment Analysis / Trade Agreements
- **BUYER IDENTIFICATION** Finding Authentic Buyer Address using Portals / Trade Events
- **BUSINESS REGISTRATION** Getting Started UDYAM, GST, IEC, RCMC, FSSAI & ICEGATE Registration
- **EXPORTS SCHEMES REFUNDS** Duty Drawback, RODTE, ROSCTL GST
- **END TO END ORDER PROCESSING** Step by Step Roadmap from inquiry to payment.

WHO SHOULD ATTEND
- MSME Manufacturers Export aspiring Entrepreneurs
- Export Marketing Managers Documentation Executives
- MBA (International Business)., M.Com., B.Com., Students

COURSE FEE : Rs.5,900/- (incl.GST)
TOTAL NUMBER OF SEATS : 25 ONLY (FIRST COME FIRST SERVED BASIS)
For Further Details **www.cftichennai.in E-Mail: msmetdc@cftichennai.in**
Mob : 9150495272 / 93457 66188 Ph : 044 22501529 Ext : 27
GOVT OF INDIA CERTIFICATE WILL BE ISSUED

SBI பாரத ஸ்டேட் வங்கி
மையப்படுத்தப்பட்ட சில்லறை சொத்து மேலாண்மை பிரிவு (CRAMC)
எண்.157, 3வது தளம், SB இணைப்பு கட்டிடம், அண்ணா சாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 044-28540016, 28540017.
மின்னஞ்சல் : rwcramc.lhoche@sbi.co.in

SARFAESI சட்டம் 2002-ன் பிரிவு 13(4)-ன் கீழ் சொத்தின் சுவாதீனம் தொடர்பான அறிவிப்பு வெளியீடு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதி 9-க்கு ஏற்ப **எங்களது அண்ணா சாலை (சென்னை) கிளை (00878) HLC MRC நகர் (17193) உடன் இணைக்கப்பட்ட SBI வீட்டு டெர்ம் கடன் கணக்கு எண்.32799729898, SBI வீட்டு டெர்ம் கடன் கணக்கு எண்.34325974144, TOP-UP கடன் கணக்கு எண்.37719762541 & SURAKSHA கடன் கணக்கு எண்.32799730428 கொண்ட கடன்தாரர் : (1) திரு. ராம்ஜி V, (கடன்தாரர்),** த/பெ திரு. வெங்கட்ராமன், குடியிருப்பு/நிரந்தர/சொத்து முகவரி : ஃபிளாட் எண்.F1, முதல் தளம், மனை எண்.93, M.G.M. தியாகராஜபுரம் ஸ்டேஜ் VII, திருக்கச்சூர், மறைமலை நகர், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம், பின் - 603 204, CBS முகவரி : 7, ஸ்ரீராம் அப்பார்ட்மெண்ட்ஸ், பாரதியார் 2வது தெரு விரிவாக்கம், பழவந்தாங்கல், சென்னை, பின் - 600 114, அலுவலக முகவரி : மேல்நிலை துணை தொகுப்பாளர், பணியாளர் குறியீடு : 50241, KSL மீடியா லிமிடெட், கஸ்தூரி சென்டர், 124, வாலாஜா ரோடு, சென்னை, பின் - 600 002, என்பவருக்கு **29.12.2025** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு அனுப்பி, அதில் குறிப்பிட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகையான **ரூ.22,19,837/- (ரூபாய் இருபத்து இரண்டு லட்சத்து பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று முப்பத்து ஏழு மட்டும்)** மற்றும் வட்டி & செலவுகள் முதலியன சேர்த்து மேற்சொன்ன அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் தொகையை திரும்ப செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

சம்பந்தப்பட்ட கடன்தாரர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாக அறிவிக்கப்படுவது என்னவெனில் கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்துக்களை மேற்சொன்ன சட்டம் 13(4)-ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், அதனுடன் வாசிக்கப்படும் விதி 9-க்கு இணங்கவும், **02-ம் தேதி மார்ச் மாதம் 2026-ம் வருடம்** அன்று கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி சுவாதீனம் எடுத்துக்கொண்டுள்ளார்.

கடன்தாரருக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக்கொண்ட இந்த சொத்து பாரத ஸ்டேட் வங்கிக்கு **02.03.2026** தேதி வரை செலுத்த வேண்டிய தொகையான **ரூ.22,62,046/- (ரூபாய் இருபத்து இரண்டு லட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நாற்பத்து ஆறு மட்டும்)** அத்துடன் 03.03.2026 தேதி முதல் மேலதிக வட்டி மற்றும் கட்டணங்கள் சேர்த்து பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக்கொள்ள கூடாது அப்படி வைத்துக்கொண்டால் அது பாரத ஸ்டேட் வங்கிக்கு செலுத்த வேண்டிய பிணைய தொகைக்கு உட்பட்டது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

சட்டப்பிரிவு 13-ன் உட்பிரிவு (8)-ன் ஷரத்துகளின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி பிணையமாக்கப்பட்ட சொத்துக்களை மீட்டுக்கொள்ள கடன்தாரர்களுக்கு உள்ள கால அவகாசத்தை கவனத்தில் கொள்ளவும்.

அசையா சொத்தின் விவரம்

சொத்தின் உரிமையாளர் : திரு. ராம்ஜி V. சொத்தின் அட்டவணை - அட்டவணை அ : காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா, எண்.74, திருக்கச்சூர் கிராமத்தில் உள்ள காலி நிலத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும். இதன் மனை எண்.93, சர்வே எண்கள்.480/1F மற்றும் 481/2, பட்டா எண்.1238, பட்டாவின்படி சர்வே எண்கள்.480/1F1D மற்றும் 481/1A4-ல் அடங்கியுள்ளது. அங்கீகார எண்.CR/D.T.C.P.M84-175/L.P. எண்.143-ன்படி M.G.M. தியாகராஜபுரம் ஸ்டேஜ்-VII-ல் 2400 சதுர அடி பரப்பளவு கொண்டது மற்றும் நிலத்தின் எல்லைகள் மற்றும் அளவீடு - வடக்கில் : மனை எண்.88, 40 அடி, தெற்கில் : 24 அடி அகல ரோடு, 40 அடி, கிழக்கில் : மனை எண்.92, 60 அடி, மேற்கில் : மனை எண்.94, 60 அடி. மொத்தம் 2400 சதுர அடி நிலப்பரப்பளவு கொண்ட செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு இணை-II துணை பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. **அட்டவணை ஆ சொத்து :** அட்டவணை அ-வில் குறிப்பிட்டுள்ள சொத்தில் 2400 சதுர அடியிலிருந்து 600 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு கொண்ட நிலத்தின் முதல் தளத்தில் உள்ள ஃபிளாட் எண்.F1, இணை II செங்கல்பட்டு துணை பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.

தேதி : 02.03.2026
இடம் : சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, CM/AGM.

தொழிலாளியை கொலை செய்தவருக்கு ஆயுள்

செங்கல்பட்டு

புதுக்கோட்டை மாவட்டம் மேட்டுப்பட்டி பூதக்குடி இலுப்பூர் வட்டத்தை சேர்ந்த அம்மு அமுல்ராஜ், அவரது தம்பி பிலிப்ராஜ் இருவரும், சென்னை குரோம்பேட்டையில் புதிதாக கட்டப்படும் கட்டிடத்தில் பாலமுருகன் மேஸ்திரியிடம் வேலை செய்து கொண்டு அங்கேயே தங்கியுள்ளனர்.

2010--ம் ஆண்டு டிச. 31-ம் தேதி இரவு 12 மணி அளவில் பிலிப்ராஜுக்கும் ஈஸ்வரன் என்பவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதில் ஈஸ்வரன், பிலிப்ராஜ் தலையில் கல்லை போட்டு அவரை கொலை செய்தார். குரோம்பேட்டை போலீஸார் ஈஸ்வரனை கைது செய்து சிறையில் அடைந்தனர். இந்த வழக்கு செங்கை மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. நேற்று வழங்கப்பட்ட தீர்ப்பில், நீதிபதி சரவணகுமார் ஈஸ்வரனுக்கு ஆயுள் தண்டனை, ரூ.3,000 அபராதம் விதித்தார். அபராதத்தை கட்டத் தவறினால், மேலும் 3 மாத கடுங்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

KOTHARI SAFE DEPOSITS LIMITED
Regd. Off & Vault at "Kothari Buildings" 116, Mahatma Gandhi Road, Nungambakkam, Chennai- 600 034.
CIN: U65921TN1936PLC001424 / GST No: 33AABCK5252G1ZU
Phone No: 044-28331999 Mobile No: 9382645943

PUBLIC NOTICE

Notice is hereby given to the public that Mr. T.Krishnamoorthi and Mr. D.Panirselvam both residing at No.21, Ragavan Colony, 1st Cross Street, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600083 as per our records have opened a locker No.2407 class D on 12.05.1978 with us at our branch "Oriental Buildings", No.97, Armenian Street, Chennai - 600001. Since Mr. T.Krishnamoorthy is aged about 81 years and residing at Singapore, he has executed Power of Attorney in favour of Mr. Krishnamoorthy Karthikeyan for surrendering the Locker No.2407. The Power of Attorney documents signed only by Mr. T. Krishnamoorthy as an executant and Mr. Krishnamoorthy Karthikeyan as a power agent. The Power of Attorney holder Mr. Krishnamoorthy Karthikeyan had informed us that the second holder Mr. D. Panirselvam, the co-licensee is no more and could not obtain the death certificate since he expired. Further, the POA holder Mr. Krishnamoorthy Karthikeyan had requested us to allow him to surrender the Locker No. 2407 as per POA in the absence of Mr. D. Panirselvam for the reasons explained above. If anyone from Mr. D. Panirselvam's side have any objection in respect to surrender the Locker No.2407, they must inform us within 14 days of this notice, Failing which it shall be presumed that the request of Mr. Krishnamoorthy Karthikeyan to surrender the Locker No.2407 can be processed by this company without any further notice and any claim from Mr. D. Panirselvam's side will not be binding on us after the said notice period is expired.

Place: Chennai
Date: 04.03.2026

For Kothari Safe Deposits Limited
S Dharma Rajan
General Manager

இறால் பண்ணையில் மின்சாரம் பாய்ந்து

வடமாநில தொழிலாளி உயிரிழப்பு

பொன்னேரி

மீஞ்சூர் அருகே உள்ள காட்டூர் - அபிராமிபுரம் பகுதியில் தனியார் இறால் பண்ணையில் அசாம் மாநிலத்தைச் சேர்ந்த ப்ரோபின் கோகோய் (38) (Probin Gogoi) உட்பட 10 வடமாநில தொழிலாளர்கள் கடந்த இரு மாதங்களாக சமையல் மற்றும் பண்ணை பராமரிப்பு வேலைகளில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், ப்ரோபின் கோகோய் நேற்று முன் தினம் இரவு சமையல் செய்து விட்டு, வழக்கம் போல் இறால் பண்ணையின் ஏர் ஃபில்டர் மோட்டாரை இயக்க சென்றார். அப்போது, அவர் மின்சார இணைப்பை துண்டிக்காமல் மோட்டார் உடன் வயரை இணைக்கும் பணியில் ஈடுபட்டார். மாலை வேளையில் தடைபட்ட மின்சாரம், அந்த நேரத்தில் மீண்டும் விநியோகம் செய்யப்பட்டதால், ஏர் ஃபில்டர் மோட்டாரில் இருந்து மின்சாரம் பாய்ந்ததில் ப்ரோபின் கோகோய், தண்ணீரில் விழுந்தார். பின்னர் மருத்துவமனை கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார். இதுகுறித்து, காட்டூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரும் படிவம் எண்.1066/2026/ஆர்3 நாள்: 03.03.2026
குறுகிய கால ஒப்பந்த படிவம் இனம் வாரியான விலை (இரட்டை உறை முறை)

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும், கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இணை இயக்குநர்/திட்ட இயக்குநரால் 2025–26 ஆம் ஆண்டு முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் (கூடுதல்) கீழ், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சாலைகள் மேம்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் பணிகளை மேற்கொள்ள மின் ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது.

1. முழுமையான விவரங்களுக்கு **https://tntenders.gov.in** இணையதள முகவரியினை பார்வையிடலாம்.
2. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை **https://tntenders.gov.in** என்ற இணைய தள முகவரியில் இலவசமாக **04.03.2026 முதல் 10.03.2026 வரையிலான** காலத்தில் எடுத்துக் கொள்ளலாம்.
3. மொத்த மதிப்பீட்டு தொகையில் 1% தொகை முன்வைப்புத் தொகையாக செலுத்தப்பட வேண்டும்.
4. வேலைகள் தொடர்பான கூடுதல் விவரங்கள் மற்றும் நிபந்தனைகள் தேவைப்படின், இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் நேரில் தெரிந்து கொள்ளலாம்.
5. **ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக முக்கியமான நாட்கள்.**
   1. முன் ஒப்பந்த கூட்டம் நடைபெறும் நாள் மற்றும் நேரம் **06.03.2026 – 11.00 பி.ப.**
   2. மின் ஒப்பந்த நமூனா பதிவிறக்கம் செய்ய கடைசி நாள் மற்றும் நேரம் **10.03.2026 – 3.00 பி.ப.**
   3. மின் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் **10.03.2026 – 3.00 பி.ப..**
   4. மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **10.03.2026 – 4.00 பி.ப.**

இணை இயக்குநர் / திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி.
செ.ம.தொ.இ/1528/ஒப்பந்தப்புள்ளி/2026

Central Bank of India सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
1911 से आपके लिए 'केंद्रित' "CENTRAL" TO YOU SINCE 1911
ஆலந்தூர் கிளை
எண்.343, MKN ரோடு,
ஆலந்தூர், சென்னை-600016 Ph-044-23464298
E-mail: bmchen0885@centralbank.co.in

SARFAESI சட்டம் 2002-ன் கீழ் இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) / 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்தினை சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **அடையாளபூர்வ சுவாதீனத்தில்** எடுக்கப்பட்டு அந்த சொத்து **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு"** மற்றும் **"எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் கடன்தாரர்/ அடமானதாரரிடமிருந்து கடன் தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளை சேர்த்து வசூலிப்பதற்காக **https://baanknet.com** என்ற இணையதளம் வழியாக **விற்பனை செய்யப்படும்** என இதன்மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்: Mr.R.ரவிகுமார், S/o.ராதாகிருஷ்ணன், 1) எண்.398, ஜான் கென்னடி தெரு, அன்னை சத்யா நகர், ஜாபர்கான்பேட்டை, அசோக் நகர், சென்னை-600083, 2) 16, குண்டலகேசி தெரு, M.G.R. நகர், சென்னை-600078, **ஜாமீன்தாரர்: Mr.S.நாகராஜன்,** S/o.O.T.சண்முகம், 2/2, பிள்ளையார் கோயில் தெரு, காந்தி நகர், போரூர், சென்னை-600116

கோரிக்கை அறிவிப்பு தேதி: 11.11.2024 / கடன் நிலுவைத்தொகை: 03.03.2026 அன்றுள்ளபடி ₹ **30,37,036.92** சட்டரீதியான கட்டணங்கள், வட்டி, செலவுகள் தவிர்த்து; **சுவாதீனம் அறிவிப்பு தேதி: 20.02.2025**

அடமானத்தில் உள்ள சொத்து விவரம்

ஷெட்யூல் A: RS எண்370(பகுதி), **கோடம்பாக்கம் கிராமம், மாம்பலம், கிண்டி தாலுகா, தற்போது கோடம்பாக்கம் தாலுகா, சென்னை மாவட்டம், கதவு எண்.398, மனை எண்.389, ஜான் கென்னடி தெரு, அன்னை சத்யா நகர் பகுதி-II திட்டம், ஜாபர்கான்பேட்டை, சென்னை-600 083** என்னும் முகவரியில் **22.0 சதுர மீட்டர் அல்லது 237 சதுர அடி நிலம் அதனுடன் தரை தளத்தில் - 237 சதுர அடி, முதல் தளத்தில் - 237 சதுர அடி, இரண்டாவது தளத்தில் - 237 சதுர அடி மற்றும் ஹெட் ரூம் - 50.67 சதுர அடி, ஆக மொத்தம் 711 சதுர அடி கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: தெரு, தெற்கு: மனை எண்.392, கிழக்கு: மனை எண்.390, மேற்கு: மனை எண்.388.

குறைந்தபட்ச கேட்பு விலை	₹ 21,50,000/-	டேவணித்தொகை	₹ 2,15,000/-
ஏல உயர்வு தொகை	₹ 20,000/-	சுவாதீனம் வகை: அடையாளபூர்வ (Symbolic)	
இ-ஏல தேதி / நேரம்	10.04.2026	காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை	

EMD சமர்ப்பிக்க கடைசி நாள்/நேரம்: 10.04.2026 மாலை 3.30 மணிக்குள்
சொத்தினை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: 07.04.2026 காலை 10.00 மணி முதல் 4.00 மணி வரை

மேலும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் விபரத்திற்கு கீழ்கண்ட இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம், இ-ஏல சேவை வழங்குனர் இணையதள முகவரி: **https://baanknet.com (அல்லது)** வங்கியின் இணையதள முகவரி: **https://www.centralbankofindia.co.in**
சொத்துக்களை பார்வையிட மற்றும் இதர விவரங்களுக்கு, **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஆலந்தூர் கிளை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் Mob: 89399 75801** அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

SARFAESI சட்டம், 2002 விதி 8(6) / 9(1)-ன்கீழ் 30 நாள் கால அவகாச விற்பனை அறிவிப்பு
மேற்காணும் கடன்தாரர்கள்/அடமானதாரர்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பதாவது யாதெனில் மேற்காணும் கடன்பாக்கி மற்றும் இதர செலவுகளை இ-ஏலத்தேதிக்கு முன்னர் செலுத்தத் தவறினால் அந்த சொத்து ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு கடன் பாக்கி வசூலிக்கப்படும். பின்னர் பாக்கி ஏதேனும் இருந்தாலும் வட்டி மற்றும் இதர செலவுகளும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

இடம்: சென்னை
தேதி: 03.03.2026
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா

அரசியல், சமூக அமைப்புகள் தங்களது செய்திகளை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.
மின்னஞ்சல் முகவரி: press.release@hindutamil.co.in

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

முன்பு Vanitha Kumari என அழைக்கப்பட்ட நான், Kamal Kumar அவர்களின் மனைவி, 481 டி.ஹெச். சாலை பழைய வாஷர்மன்பேட்டை சென்னை – 600 021 வசிப்பவர், இனிமேல் Vanita என அழைக்கப்படுவேன்.

I, BHANU SEKARAN SUDAKAR born on 09/06/1991 (Native District : Virudhunagar) Residing at 73/76,NMV Subban Street, Aruppukottai, Virudhunagar Dt - 626101 Tamilnadu shall henceforth be known as BHANU SEKARAN SUDHAGAR.

My daughter, M.P Jothi Shree, Born on 3rd January 2014 (District of Birth: Vellore) residing at No.37, Pillayar Kovil Street, Kambarajapuram Village, Thiruvalam, Vellore-632 515, shall henceforth be known as JAYADEVIBALA .M.P – Mugunthan (Father)

My daughter, M.P Bagya Shree, Born on 4th October 2011 (District of Birth: Vellore) residing at No.37, Pillayar Kovil Street, Kambarajapuram Village, Thiruvalam, Vellore - 632 515, shall henceforth be known as BHAGYAASREE .M – Mugunthan (Father)

பிறசேவை பகுதி

கலை நிகழ்ச்சிகள்

பொது

பொது அறிவிப்பு

மாண்பமை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்
அசல் வழக்கு எண். 77 / 2025
1.கார்த்திகேயன்
2.சந்திரன் ....வாதிகள்
-எதிர்-
1.தயாளகிருஷ்ணன், 2.ஜானகிராமன்
3.ஜெகதீசன், 4.திருமுருகன்
5.சீதா .... பிரதிவாதிகள்

அறிவிப்பு

வாதிகள் தரப்பில், செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம் முகுந்தகிரி கிராமம் மற்றும் அஞ்சல் என்ற முகவரியில் வசித்து வரும் தட்சணாமூர்த்தி மகன் தயாளகிருஷ்ணன் (D1-வது பிரதிவாதி) மற்றும் தட்சணாமூர்த்தி மகன் ஜெகதீசன் (D 3 - வது பிரதிவாதி) அவர்களுக்கு தெரிவித்துக்கொள்வது என்னவென்றால் தங்களுக்கு எதிராக மாண்பமை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்- ல் அசல் வழக்கு எண். 77 / 2025 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கானது வருகின்ற 18.03.2026 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. ஆகையால் தாங்களோ அல்லது தங்களுடைய வழக்கறிஞர் மூலமாகவோ **18.03.2026** தேதியன்று **காலை 10.30** மணியளவில் நீதிமன்றத்தில் தவறாமல் ஆஜராக வேண்டியது. தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்ப்பாகும் என்பதை அறியவும்

வாதியின் வழக்கறிஞர்கள்
ஏ.இராஜன் காந்தி. பி.ஏ.,பி.எல்., .MS
1693/2000 Mail: ragavidad561974@gmail.com
Mobile: 9843763720
தே.பார்த்திபன். பி.ஏ.,பி.எல். மதுராந்தகம்

மாண்பமை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்
இ ம எண் 1/2025 இல்
அசல் வழக்கு எண். 77 / 2025
1.கார்த்திகேயன்,
2.சந்திரன் ... மனுதாரர்கள் / வாதிகள்
-எதிர்-
1.தயாளகிருஷ்ணன், 2.ஜானகிராமன்
3.ஜெகதீசன், 4.திருமுருகன்
5.சீதா ... எதிர் மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

அறிவிப்பு

(R1/D1-1 வது மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம் முகுந்தகிரி கிராமம் மற்றும் அஞ்சல் என்ற முகவரியில் வசித்து வரும் தட்சணாமூர்த்தி மகன் தயாளகிருஷ்ணன் எதிர்மனுதாரர்/ 1-வது பிரதிவாதி) மற்றும் தட்சணாமூர்த்தி மகன் ஜெகதீசன் (R3/D3- 3-வது எதிர்மனுதாரர் 3-வது பிரதிவாதி) அவர்களுக்கு தெரிவித்துக் கொள்வது என்னவென்றால் தங்களுக்கு எதிராக மாண்பமை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்- ல் அசல் வழக்கு எண். 77 / 2025 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்கள் / வாதிகள் மேற்படி அசல் வழக்கோடு சேர்ந்து இடைக்கால மனு எண். 1/2025-ம் தாக்கல் செய்து இரு மனுக்களும் வருகின்ற 18.03.2026 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. ஆகையால் தாங்களோ அல்லது தங்களுடைய வழக்கறிஞர் மூலமாகவோ **18.03.2026- ஆம் தேதியன்று காலை 10.30 மணியளவில்** நீதிமன்றத்தில் தவறாமல் ஆஜராக வேண்டியது. தவறும் பட்சத்தில் மனு / வழக்கு தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்ப்பாகும் என்பதை அறியவும்

வாதியின் வழக்கறிஞர்கள்
ஏ.இராஜன் காந்தி. பி.ஏ.,பி.எல்.,
பதிவு எண்.MS 1693 /2000 Mail: ragavidad561974@gmail.com Mobile: 9843763720
தே.பார்த்திபன். பி.ஏ.,பி.எல். மதுராந்தகம்

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859-860, Anna Salai, Chennai 600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by Ra.Babu Vijay at THG PUBLISHING PVT.LTD. Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist.Pin: 603209, Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).